Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

இருப்பு எடுக்கும்

மலிவு விற்பனை

ரொலறம்ஸில்

நடைபெறுகின்றது.

46, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 14 ஆம் நாள் ஷவ்வால் பிறை 22 (25-2-65) வியாழக்கிழமை இதழ் 17

# ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்படவேண்டும்

## மத்திய, ராஜ்ய அரசாங்கங்களுக்கு காங்கிரஸ் காரியகமிட்டி கோரிக்கை

### ஆங்கிலமும் ஹிந்தியும் ஆட்சிமொழியாகலாம்

புதுடில்லி, பெப். 24

**இந்தியாவின் ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தையும் ராஜ்ய அரசாங்கங்களையும் காங்கிரஸ் காரியக் கமிட்டி கேட்டுள்ளது. ஹிந்தி பேசாத மக்களின் நலன் கருதி, காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அளித்த உறுதிமொழிகளுக்கு சட்ட வடிவம் கொடுத்து அவற்றை செயல்படுத்த உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டி தெரிவித்துள்ளது.**

மொழிப் பிரச்னை குறித்து கடந்த இரண்டு நாட்களாக ஆலோசனை நடத்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி, உருப்படியான சில யோசனைகளை இன்று வெளியிட்டது. நேற்று அமைக்கப்பட்ட ஐவர் கமிட்டி இன்று சில யோசனைகளை காங்கிரஸ் காரியக்கமிட்டியிடம் சமர்ப்பித்திருந்தது. ● ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்பட்டு, நேருஜியின் வாக்குறுதிகள் சட்டமாக்கப்படவேண்டும். ● சகல ராஜ்யங்களிலும் மும்மொழித்திட்டம் அமுல்செய்யப்படவேண்டும். ● அகில இந்திய போட்டி பரீட்சைகள் யாவும் ஹிந்தி, ஆங்கிலம், மற்றும் பிராந்திய மொழிகளில் நடைபெறவேண்டும். இவை மூன்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முக்கிய தீர்மானங்களாகும்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியது.

**தமிழுக்கும் உரிய இடம்?**

தென்னாட்டில் ஹிந்தி மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படலாம் என்றும் அதேபோன்று ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் தென்னாட்டு மொழி ஒன்றுக்கு இடமளிக்கப்படலாம் என்றும் காரியக்கமிட்டி தெரிவித்துள்ளது.

மத்திய அரசாங்கத்துடன் ஹிந்தி பேசாத ராஜ்யங்கள் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளலாம் என்றும், ஆனால் பிராந்திய மொழிகளில் தொடர்பு ஏற்படுத்தக் கூடாது என்றும் இக்கமிட்டி தெரிவித்துள்ளது. அகில இந்திய தேர்வுப் பரீட்சைகள் ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிகளில் நடத்தப்படவேண்டும். பரீட்சார்த்திகள் விரும்பும் மொழியில் விடை எழுத அனுமதிக்கப்படவேண்டும் என்றும் காரியக் கமிட்டி அறிவித்துள்ளது. ராஜ்ய அரசாங்கங்களின் சம்மதம் இன்றி எந்த ஒரு மாற்றமும் செய்யக் கூடாது என்று இக்கமிட்டி மத்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

காலித்தனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ள இக்கமிட்டி, அண்மையில் தென்னாட்டில் நடைபெற்ற வன்முறைச் செயல்களைக் கண்டித்தும், இதில் பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது.

## யாழ். பஸ்நிலையம் குறித்து மந்திரி அனில் விளக்கம்

### மாநகரசபை தடையாக இருக்கிறதாம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் புதிய பஸ் நிலையத்தை உடன் ஆரம்பிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் இதற்கு மாநகர சபைதான் தடையாகவிருப்பதாக போக்குவரத்து மந்திரி திரு. அனில்முனசிங்கா தம்மைச் சந்தித்த வடபகுதி பிரயாணிகள் சம்மேளனப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை விஜயஞ்செய்த போக்குவரத்து அமைச்சர் திரு. அனில்முனசிங்கா யாழ்ப்பாணத்திலுள்ள கிழக்கு டிப்போ, மேற்கு டிப்போக்களையும், பலாலி விமானநிலையத்தையும், கோண்டாவிலில் உருவாகும் புதிய பஸ்நிலையத்தையும் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தை உடன் நிறுவ யாழ்ப்பாண மாநகரசபை தடையாக இருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், மாநகர சபை பஸ்நிலையம் நிறுவுவதற்கான இடத்தைத் தந்ததும் உடன் அங்கு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படும் என உறுதியளித்தார்.

கோண்டாவிலில் உருவாகும் புதிய பஸ்நிலையத்தில் கண்டீன், பஸ் கழுவும் இடங்கள் இவ்வருடம் ஜூலை மாதத்திற்குள் பூர்த்திசெய்யப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

இன்று காலை அமைச்சர் இ. போ. ச. யாழ்ப்பாணக் காரியாலயத்திற்கும், பருத்தித்துறை டிப்போவுக்கும், நீர்வேலி பாலர் விடுதிக்கும் விஜயஞ்செய்வார்.

மாலையில் வடபகுதியில் ஐக்கிய இடதுசாரி அபேட்சகர்களை ஆதரித்து நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரை நிகழ்த்துவார்.

## "ஹிந்தி ஆங்கிலம் இரண்டும் உத்தியோக மொழிகள்"

### பிரதமருக்கு ராஜ்ய முதன் மந்திரிகள் சிபார்சு

புதுடில்லி, பெப். 24

ஹிந்தி பேசாத ராஜ்யங்களுடன் ஆங்கிலத்திலேயே மத்திய அரசாங்கம் தொடர்பு கொள்ளவேண்டும் என உள்நாட்டுமந்திரி திரு. குல்ஸாரிலால்நந்தா லோகசபையில் அறிவித்தார்.

எந்த ராஜ்யத்துக்கும் இதுவரை மத்திய அரசாங்கம் ஹிந்தியில் கட்டளை எதுவும் பிறப்பிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

ஹிந்தியும், ஆங்கிலமும் இந்தியாவின் உத்தியோக மொழியாக இருக்கவேண்டும் என 14 ராஜ்யங்களின் முதன்மந்திரிகளும் சேரள கவர்னர் திரு கிரியும் இன்று பிரதம மந்திரி சாஸ்திரியிடம் தெரிவித்தார்கள்.

## "ஈழநாடு" சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

ஈழநாடு சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்கு பணமாகவும் பொருளாகவும் மொத்தம் 25,913 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது.

நேற்றுப்பிற்பகல் கிடைத்த வசூல் விபரம்:

ஓர் அன்பர், வேலணை 3-00

## முதன்மந்திரிகள் மகாநாடு வெற்றியுடன் முடிவடைந்தது

### சகல தீர்மானங்களும் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்

புதுடில்லி, பெப். 24

மொழிப் பிரச்னை குறித்து பிரதமர் சாஸ்திரி கூட்டிய முதன் மந்திரிகள் மகாநாடு இன்று முடிவடைந்தது. மொழிப்பிரச்னை குறித்து ராஜ்ய முதன் மந்திரிகள் நேற்றும் இன்றும் தீவிரமாக ஆலோசனை நடத்தினர்.

இம்மகாநாடு முடிவடைந்த பின்னர் பிரதமர் சாஸ்திரி தெரிவிக்கையில்; முதன் மந்திரிகள் மகாநாடு வெற்றிகரமாகவும் பலனுள்ளதாகவும் முடிவடைந்திருக்கிறதென்றும் ராஜ்ய முதன் மந்திரிகள் அனைவரும் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் தாயகம் திரும்புகிறார்கள் என்றும் கூறினார்.

மகாநாட்டில் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் அவை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்படும் என்றும் பிரதமர் சாஸ்திரி தெரிவித்தார்.

## படகு விபத்து: 40 பேர் பலி

கடாக், பெப். 24

ஒரிஸாவில் இன்று ஏற்பட்ட படகு விபத்தொன்றில் 40 பேர் மூழ்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நதிக்கரையில் நடைபெற்ற விழாவொன்றில் கலந்துகொள்ளும் பொருட்டு படகொன்றில் 100 பேர் சென்றுகொண்டிருந்தபொழுது படகு கவிழ்ந்து இவ்விபத்து ஏற்பட்டதென்று அறிவிக்கப்பட்டது. இவரின் சடலங்கள் [illegible] டன.

## காணமல்போன 10 சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பு, மத்துகாமம், மட்டக்களப்பு, அநுராதபுரம் ஆகிய இடங்களில் காணமற்போனதாகக் கூறப்படும் 10 சைக்கிள்கள் பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த ராஜாபாலிபாய் என்பவரைப் பொலிசார் கைதுசெய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன் நேற்று ஆஜர்படுத்தினர்.

யாழ்ப்பாணம் பொலிசார் கடந்த ஒருவாரமாக அதிகரித்துவரும் சயிக்கிள் திருட்டு சம்பந்தமாக தீவிர சோதனை நடத்தியபின், இந்த 10 சைக்கிள்களையும் நேற்று யாழ்ப்பாணத்தில் கண்டுபிடித்தனர்.

களவாடப்பட்டதாகக் கூறப்படும் சைக்கிள்களை வாங்கி, கடையிலிருந்து விற்றதாயும், அதற்கு ரசீது கொடுத்ததாயும் குற்றம்சாட்டப்பட்ட பலரில் ராஜாபாலியும் ஒருவராகும்.

யாழ்ப்பாணம் குற்றப்பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சவுந்தரநாயகம் யாழ்ப்பாணம் மஜிஸ்டிரேட் முன் அவரை ஆஜர்செய்தார்.

மாஜிஸ்டிரேட் பாலிபாயை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு வழக்கை மார்ச் 1-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## ஒப்பந்தம்

புதுடில்லி, பெப். 24

இந்தியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே புதிய தகவல் தொடர்பு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அறமாவது யாது? அன்பர் பணியே அறமாம். முத்திக்கு வித்து யாது? மோகத்தை முனிதல். எமக்கு வேண்டியது எது? வேண்டாமை. கூடாத கூட்டம் எது? கோபம், காமம், மோகம் ஆதியன. பெரியவர் யார்? சிவனடிக்கன்பு செய்பவர். சிறியவர் யார்? சிவனடிக்கன்பு செய்கிலர்.

— யோகசுவாமிகள்.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி ௴ 14 உ (25-2-65)

## வாக்காளரும் வாகனமும்

தேர்தல் தினமான மார்ச் 22-ந் திகதியன்று வாக்குப் பதிவுச் சாவடிக்கு நடந்து செல்ல முடியாதவர்களும், பஸ்களில் வரமுடியாதவர்களும் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் வாங்கி, அதன்மீது தனிப்பட்ட மோட்டார்களில் செல்ல ஒரு வாரத்திற்கு முன்பாகவே ஆங்காங்குள்ள தேர்தல் அதிகாரிக்கு மனுச் செய்ய வேண்டுமென்று தேர்தல் கமிஷனர் தெரிவித்துள்ளார். இந்த ஏற்பாடு தேர்தல் ஊழல்களைக் குறைக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டதெனினும், மக்களுக்கு வீண் இம்சை ஏற்படுத்துவதுடன் பலர் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் தடுப்பதாகவும் முடியும்.

பணபலமுள்ள கட்சிகளும் வேட்பாளர்களும் அதிகமோட்டார்களை அமர்த்தி வாக்காளரைத் தங்கள் வாகனங்களில் ஏற்றிச் சென்று ஆதரவு பெற முயலுவதும், மற்றக்கட்சிகளுக்கும் வேட்பாளருக்கும் இந்த வாய்ப்பு இல்லாமல் பாதகம் ஏற்படுவதும் உண்மையே. இதே சமயம் யாருடைய காரில் சென்றாலும் வாக்காளரில் பலர், தங்களுக்கு விருப்பமான போட்டி அபேட்சகருக்கே வாக்களிப்பது சர்வ சகஜம். வாக்காளரிடையே அரசியலறிவு அதிகரித்துள்ளது. கேவலம் மோட்டாரில் ஏற்றிச் செல்வதற்காக அவர்கள் தங்கள் அருமையான வாக்குரிமையைத் துஷ்பிரயோகம் செய்துவிட மாட்டார்கள். அவ்வளவு சுலபமாக இக்காலத்தில் அவர்களை விலைக்கு வாங்கிவிட முடியாது.

சில இடங்களில் வாக்குப் பதிவு சாவடிகள் பல பர்லாங் அல்லது மைல் தூரத்திலும் இருக்கலாம். அவ்வளவு தூரம் நடந்து செல்ல முடியாத வயோதிபரும், பெண்களும், வைத்திய அத்தாட்சிப் பத்திரம் பெற்று, பின்னர் தேர்தல் அதிகாரிக்கு மனுச் செய்து அனுமதி பெற்று பின்னர்தான் காரில் சென்று வாக்குப் பதிவு செய்ய முடியுமாயின்; அவர்களில் பலரும் வாக்குச் சாவடிக்குச் செல்லாமலே இருந்து விடக்கூடும். கார்வைத்தாலும் கூட பலர் வாக்கு ஸ்தலத்துக்குச் செல்லுவதில்லை. கட்டாயமாக வாக்குச் செய்ய வேண்டுமென்ற முறையும் இங்கில்லை. ஆகவே வாக்குச் சாவடிக்கு நடந்து செல்ல முடியாதவர்கள், வாகன வசதியற்றவர்கள் இவர்களில் பலரையும், இப் புதிய உத்தரவு, அவர்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாமல் தடுப்பதாகவும் முடியும்.

ஆவே இம்முக்கிய விஷயத்தைப் பற்றி தேர்தல் கமிஷனர் மற்ற எல்லாக்கட்சித் தலைவர்களுடனும் கலந்து புனராலோசனை செய்து, வாக்காளருக்கு வீண் இம்சை ஏற்படாமலும், கூடுமானவரை சுலபமாக அவர்கள் தாங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துமாறும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். தேர்தல் ஊழல்களை அகற்றுவதாகக் கூறி, பலருக்குத் தங்கள் ஜனநாயக வாக்குரிமையை மறைமுகமாகப் பறிப்பது தகாது. வாக்காளர்கள் அப்பாவிகளல்லர். அவர்களிடையே அரசியல் அறிவு அதிகரித்து வருவதால், அவர்கள் தங்கள் வாக்குரிமையைச் சரிவரப் பயன்படுத்த முடியும். வாகன வசதிகளுக்கு பல புதிய கட்டுப்பாடுகளைப் போட்டு வாக்காளரை புதிய இம்சைகளுக்கு உட்படுத்துவது அனாவசியமாவதுடன், இதனால் புதிய ஊழல்களும் தலைதூக்குவதாக இருக்கும்.

—

## தலைமன்னார் வழி

தலைமன்னார் — தனுஷ்கோடி வழியை நிரந்தரமாக மூடிவிடுவதென்றும், இதற்குப் பதில் கொழும்பு—தூத்துக்குடி கப்பல் பாதையைத் திறக்கலாமென்றும் தென்னிந்திய ரயில்வே போர்டார் யோசனை செய்து வருவதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்த யோசனை உண்மையாயின் அது இந்தியாவுக்கு யாத்திரை முதலியவற்றுக்குச் செல்லுபவர்களையும் சிறப்பாக யாழ்ப்பாண மக்களையும் பெரிதும் பாதிக்கும்.

சூறாவளியால் தனுஷ்கோடி சேதமடைந்த காரணத்தால் இலங்கை—இந்திய ரயில் பாதையை நிரந்தரமாக மூடிவிடுவது தகாது. மண்டபத்தில் புதிய துறை ஏற்படுத்தலாம். அல்லது முன்காலத்தில் இருந்ததுபோல் வடமாகாணத் துறைமுகத்துக்கும் வேதாரண்யம் கோடிக்கரைக்கும் மோட்டார் வள்ளங்களை விடலாம். முப்பது மைல் தூரத்துக்குள்ளாக இந்தக் கடல் பிரயாணம் முடிந்துவிடும். கடலால் பல மைல் தூரமுள்ள கொழும்பு—தூத்துக்குடி வழியாயின், யாத்திரை செய்யும் யாழ்ப்பாணத்தவருக்கும், சிங்கள மக்களுக்கும் கூட வீண் சிரமமேற்படுவதாக இருக்கும். இலங்கை அரசாங்கம் இவ்விஷயத்தில் இந்திய அரசாங்கத்துடன் கலந்து பேசி மக்களுக்கு வசதியான நல்லதோர் நிரந்தர ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். குறுகிய அற்ப புத்திகாட்டக்கூடாது. இரு தேச நிரந்தர நல்லுறவும், மக்களின் போக்குவரத்து வசதியில் தான் பெரிதும் தங்கியுள்ளது.

# "காலஞ்சென்றவர் அடிக்கடி என்வீட்டிற்கு வருவதில்லை"

## மன்னார் கொலை வழக்கில் செல்லம்மா சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா: "காலஞ்சென்றவர் எனது வீட்டிற்கு வருவது வழக்கம். அவர் அடிக்கடி எனது வீட்டிற்கு வருவதில்லை. எனது கணவன் இல்லாத நேரத்திலும் அவர் வீட்டிற்கு வந்து எனது கணவனை விசாரித்து விட்டு சென்றுவிடுவார். சம்பவம் நடந்ததினம் காலஞ்சென்றவர் எனது வீட்டிற்கு வந்து எனது கணவரை விசாரித்து விட்டு அங்கே நின்ற வண்டியில் இருந்தார். காலஞ்சென்றவர் எனது சிநேகிதரல்ல" என்று மன்னார் கொலை வழக்கில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த செல்லம்மா கூறினார்.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் மன்னார் கொலைவழக்கு மூன்றாவது வழக்காக நேற்று காலை நீதியரசர் பி. சிறிஸ்கந்தராசா தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இவ்வழக்கில் 1964 ஜனவரி 15-ம் திகதி மன்னாரிலுள்ள வண்ணான் குளத்தில் முருகன் கருப்பையா என்பவர் ஆண்டிசரு பையாவை கொலைசெய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் திரு. எஸ். பாலகுமார் நியமிக்கப்பட்டிருந்தார்.

செல்லம்மா சாட்சியமளித்தபோது மேலும் கூறியதாவது:

சம்பவம் நடந்த தினம் காலஞ்சென்றவர் எனது வீட்டிற்கு வந்து எனது கணவனை விசாரித்துவிட்டு அங்கே நின்ற வண்டியில் போய் இருந்தார். நான் அடுப்படிக்குப் போனேன். அடுப்படியிலிருந்து வண்டிநின்ற இடத்தை பார்க்கமுடியாது. உடனே 'ஐயோ' என்ற சத்தம் கேட்டது. நான் வெளியில் வந்து பார்த்தேன் எதிரி காலஞ்சென்றவர் தலையிலிருந்து கோடாலியை எடுத்ததைக்கண்டேன். நான் சத்தம் போட்டேன்.

காலஞ்சென்றவருக்குக் கமம் இருக்கிறது. அக்கமம் எனது வீட்டிற்கு 2 கமம் தள்ளி இருக்கிறது. எதிரிக்கும், காலஞ்சென்றவருக்கும் தனித்தனிக் கமம் உண்டு. கமங்களுக்கிடையில் வேலி போட்டிருந்தது. அவையெல்லாம் கம்பி வேலிகள். காலஞ்சென்றவரின் கமத்திலிருந்து பார்த்தால் எனது கமம் தெரியும். எனக்கு எதிரியை தெரியும். அவருக்கு ஒரு கமம் வண்ணான்குளத்தில் உண்டு.

எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:- காலஞ்சென்றவரின் கமத்திற்கு எங்கள் கமத்தைத் தாண்டித்தான் போகவேண்டும். காலஞ்சென்றவர் சம்பவம் நடந்ததினம் வந்து எனது கணவனை விசாரித்தார். கமத்திற்குப்போய் விட்டார் என்று கூறியதும் அவர் வண்டியில் இருந்தார்.

வழ: வண்டியில் ஏன இருந்தார்?- எனக்கு எப்படிச் சொல்ல முடியும்.

வழ: அதற்குப்பின் நீ கதைக்கவில்லையா?- இல்லை. அடுப்படிக்குள் சென்று பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுத்தேன்.

வழ: நீர் கோர்ட்டில் சாட்சியமளித்தபோது காலஞ்சென்றவர் நிலத்தில் கிடந்தார் என்றீர்?—ஆம்

வழ: சம்பவம் நடந்தபோது எதிரியும் நீரும் நிலத்தில் இருந்தீர்களா?-இல்லை.

வழ: அப்பொழுது எதிரி வந்து காலஞ்சென்றவரிடம் காசைத்தரும்படி கேட்டாரா?- தெரியாது.

வழ: எதிரியை காலஞ்சென்றவர் கோடாலியால் அடித்தாரா?-இல்லை.

வழ: [illegible] தடுத்தபோது கோடரி விழுந்ததா? - இல்லை.

வழ: காலஞ்சென்றவர் அடுப்படிக்குபோனார்? - இல்லை.

வழ: காலஞ்சென்றவருடன் நீர் சிநேகிதமாய் இருந்தீர்?- இல்லை.

வழ: நீர் காலஞ்சென்றவருடன் சிநேகிதமாயிருந்தது உமது புருஷனுக்கு தெரியும்?- இல்லை.

வழ: காலஞ்சென்றவருக்கு உமது மகளை கலியாணம் செய்துதருவதாக கூறினீர்?- இல்லை.

வழ: சம்பவம் நடந்த இடத்தில் காலஞ்சென்றவரிடம், இரண்டு வருடங்கள் இரு அதன்பின் மகளை கட்டித்தருவதாகக் கூறினீரா?-இல்லை.

வழ அந்தநேரம் எதிரி வந்தார்?—இல்லை. எனது மகளைவிட எனது ஆட்கள் இருக்கிறார்கள்.

நீதிய: மூத்த மகளுக்கு என்ன வயது? - இப்பொழுது 18 வயது நடக்கிறது.

டாக்டர் சு ப்பையா புவிராஜசிங்கம் சாட்சியமளித்தார் விவசாய போதனையாளர் கே. ஸ்கந்தா சாட்சியமளித்தபோது கூறியதாவது: தான் கமத்தால் வந்துகொண்டிருந்தபோது எதிரி ஓடிவந்தார். எதற்காக ஓடிவருகிறீர் என்று கேட்டேன் தனது தம்பிக்கு சுகமில்லையென்றும் காரபிடிக்க ஓடுவதாகவும் கூறினார். நான் மேலும் சென்றபோது 'ஐயோ' என்ற சத்தம் கேட்டது. நான் ஏதோ நடந்துவிட்டதென நினைத்து செல்லம்மா வீட்டிற்கு சென்றேன். காலஞ்சென்றவர் நிலத்தில் கிடந்தார் கோடரியை நான் காணவில்லை. காலஞ்சென்றவரின் காயத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. நான் அவரை தூக்கினேன். அங்கே செல்லம்மாவும் பிள்ளைகளும் தான் இருந்தார்கள். அடுப்படியும், வீடும் திறந்திருந்தன. செல்லம்மா 'கருப்பையா கருப்பையாவை வெட்டிவிட்டதாக கூறினார். வெட்டப்பட்ட ஆயுதத்தை காட்டவில்லை.

நீதிய: எப்பக்கத்தாருக்கும் சார்பாக இருக்கிறீரா? இல்லை

மேல் விசாரணை இன்று காலை 9-15 மணிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

—

## 'கல் எறிபவர்களை கண்காணிக்கவும்'

### ரயில்வே ஜெனரல் மனேஜர் உத்தரவு

பம்பலப்பிட்டி, புதன்

ரயில் வண்டி மீது கல் எறிபவர்களைக் கண்காணிக்குமாறு ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. டி. ரம்பாலா ரயில்வே பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களையும் ஸ்டேஷன் மாஸ்டர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. ரம்பாலா இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது:

பல சமயங்களில் இவ்வித குற்றங்களை சிறுவர்களே செய்கிறார்கள். மடலகொடையில் இவ்வித குற்றத்தை 9 வயதுச் சிறுவன் செய்தபோது கையும் மெய்யுமாக பிடிபட்டார். குருநாகலையில் கல்லெறியும் வழக்கத்தைக் கொண்டிருந்த ஒரு மனிதர் பொலிஸாரினால் துரத்தப்பட்டபோது அவர் ஓடிச் சென்றார். ஓடிச் செல்கையில் அவர் ரயிலில் மோதி மரணமானார்.

'இரவு நேரங்களில் புது மணத்தம்பதிகள், மாணமாணவிகள் ஆகியோர் செல்லும் ரயில் வண்டிகள் மீதே இவ்வித கற்கள் வீசப்படுவதாகவும், ரயிலில் செல்லும் இவர்கள் காதல் சேஷ்டைகள் செய்வதாலேயே வெளியிலுள்ளவர்கள் கற்களை வீசுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

வண்ணை வைதீச்வர சுவாமி கோவில் தேர்த்திருப்பணி என்ற தலைப்புடன் ஒரு துண்டுப்பிரசுரம் கிடைத்தது. புகழ் பெற்ற இந்த ஆலயத்துக்கு புதிதாக ஐந்து தேர் (பஞ்சரதம்) திருவிடைமருதூர் இரா. கோவிந்தராஜனாலும் அவரது வைதேர்க்க உதவியாளராலும் சுமார் 2 லட்ச ரூபாய் செலவில் நிர்மாணிக்க திருவருள் பாலித்துள்ளதாம். இதற்காக ஒரு திருப்பணிச் சபை நியமிக்கப்பெற்றுள்ளதாயும் இத்திருப்பணியை கூடிய சீக்கிரம் பூர்த்திசெய்ய, வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்றும் கோவில் தர்மகர்த்தா கேட்டுக்கொண்டிருக்கிறார்.

நாவலர் பெருமான் வழிபட்ட சிறப்புள்ள கோவிலிது. இங்குதான் அவர் சைவ சமயப்பிரசங்கங்களைச் செய்து வந்ததுமாகும் பல கோவில்களிலும் புதுப்புது அழகான தேர்கள் கட்டப்பட்டு ஊருக்கே அழகும் பெருமையும் கொடுக்கையில் சிவன்கோவில் தேர்கள் மட்டும் மிக மோசமான நிலையில் இருப்பதைப் பற்றி பல அன்பர்கள் மனவருத்தமடைந்திருந்தனர். பஞ்ச ரதத்திருப்பணி வேலை ஆரம்பமாகும் செய்தி அவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி அளிப்பதாகும்.

இக்கோவில் வெள்ளை அடிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மிளிர்கின்றது. ராஜகோபுர வேலையும் பின்னர் தொடர்ந்து நடைபெறுமென்று தெரிவித்தனர்.

இங்கு வருகிற சனிக்கிழமை உற்சவம் ஆரம்பமாகிறது. நேற்று முதல் ஸ்ரீ மணிபாகவதரின் ராமாயண கதாபிரசங்கம் தொடர்ந்து நடைபெறுகின்றது. நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள் இதை ஆரம்பித்து வைத்தனர். நாவலர் பெருமான் வழிபட்ட இந்த புராதன ஆலயம் மீண்டும் புத்துயிர்பெற்று விளங்குவதற்கான நல்ல அறிகுறிகளைக் காணக்கூடியதாகவுள்ளது.

* * *

இப்போது எங்கு போனாலும், இருவர் கூடினாலும் தேர்தலைப் பற்றித்தான் பேச்சு. யார் வெல்லுவர்கள் என்ற கேள்விதான் அடிபடுகிறது. பணமும், சாராயமும் தான் கடைசி நேரத்தில் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்குமென்றும் விஷயமறிந்த ஓரன்பர் கூறுகின்றார்.

தேர்தலன்று சாராயத்தவறணைகளை மூட உத்தரவாகியுள்ளதென்றாலும் ஒரு வாரத்துக்கு முன்பே பல தொகுதிகளிலும் லாரிகளில் சாராயம் கொண்டு போய் பதுக்கி வைக்கப்படுமாம்! ஏற்கெனவே பணம் கைமாற ஆரம்பித்துவிட்டதாகவும் தெரிவித்தார் அந்த அன்பர். காரில் பதிவு ஸ்தலத்துக்கு நாம் செல்லக் கூடாதாம் புதுப்புது சட்டங்கள் பயமுறுத்துகின்றன. ஆனால் பணமும், சாராயமும் தேர்தலில் நடமாடாமல் தடுக்க முடியாதா? பணமும், சாராயமும் பெற்றுக்கொண்டு வேறு வேட்பாளருக்கே சிலர் வாக்குச் செய்வராம். பாவம்!

* * *

நற்றவத்தின் நல்லானைத் தீதாய் வந்த நஞ்சமுது செய்தானை அமுத முண்ட, மற்றமரர் உலந்தாலும் உலவாதானை வருகாலஞ் செல்காலம் வந்தகாலம், உற்றவத்தை உணர்ந்தாரும் உணரலாகா ஒரு சுடரை இருவிசும்பினூர் முன்னொன்றச், செற்றவனைத் திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே.

— அப்பர்சுவாமிகள்.

# காங்கிரஸ் காரியக் கமிட்டி, முதல் மந்திரிகள் தீவிர ஆலோசனை

## ஆட்சி மொழி பற்றி பல்வேறு யோசனைகளை ஆராய்ந்தனர்

### பெருமளவில் கருத்து உடன்பாடு

புதுடில்லி, பெப். 24

**இந்தியாவின் ஆட்சிமொழி குறித்து இங்கு கூடியுள்ள ராஜ்ய முதன்மந்திரிகள் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்துவருகிறார்கள். ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளின் அந்தஸ்து குறித்து முதல்மந்திரிகளிடையே கருத்து ஒற்றுமை நிலவுவதாய் அறிவிக்கப்பட்டது.**

நேற்றுமாலை முதன் மந்திரிகள் கூட்டத்தில் பிரதம மந்திரி திரு. சாஸ்திரி பேசுகையில் தென்னாட்டில் ஏற்பட்ட ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இரு விஷயங்கள் புலனாகிறது எனக் குறிப்பிட்டார்.

#### இரு விஷயங்கள்

கிராமப்புறங்களிலும், படிக்காதவர்கள் மத்தியிலும் தமிழுக்குப் பதில் ஹிந்தி இடம் பெறும் என கருத்து ஏற்பட்டது.

படித்தவர்கள் மத்தியில் ஆங்கிலத்துக்கு ஆதரவு இருந்தது. அதற்குக்காரணம், ஹிந்தி உத்தியோக மொழியானால் எதிர்காலத்தில் தங்கள் உத்தியோகம் பெறுவதற்கு இடையூறு ஏற்படும் என்ற கருத்து ஏற்பட்டது. இதன்விளைவாகவே மாணவர்கள் கிளர்ச்சியில் இறங்கினார்கள்" என்றும் சாஸ்திரி கூறினார்.

எதுவாயினும் இக்கிளர்ச்சி முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டது என்றும், பெரும்பாலான மாணவர்கள் பலாத்காரத்தில் இறங்கவிரும்பவில்லை என்றும் ஆனால் நிர்ப்பந்தத்தின் காரணமாக அப்படிச் செய்ய நேர்ந்தது என்றும் சாஸ்திரி கூறினார்.

#### கமிஷன் நியமனம்

நாட்டில் மாணவர் கிளர்ச்சி பற்றி விசாரணை நடத்த ஒரு கமிஷன் நியமிக்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்தார்,

இன்றுமாலை முதன்மந்திரிகள் மீண்டும் கூடி மொழிப்பிரச்னை பற்றி ஆராய்ந்தார்கள். நேற்றைய கூட்டத்தில் தமிழ்நாடு, மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம், ஆந்திரபிரதேசம், குஜராத். ராஜஸ்தான், ஒரிஸ்ஸா, பீகார் ஆகிய ராஜ்யங்களின் முதன்மந்திரிகளும கேரள கவர்னரும் பேசினார்கள்.

இன்றுகாலை காங்கிரஸ்காரியக்கமிட்டி கூடி மொழிப்பிரச்னைபற்றி மீண்டும் ஆராய்ந்தது.

#### மும்மொழித் திட்டம்

நேற்றைய கூட்டத்தில் மும்மொழித்திட்டத்தை பயனுள்ள உண்மையான வழியில் அமுல் நடத்துவது பற்றியும் முதன் மந்திரிகள் ஆலோசித்தனர்.

அகில பாரத சர்விசுக்கு ஆள் எடுப்பதில் ஹிந்தி பேசாதோருக்கு இடையூறு எதுவும் ஏற்படக்கூடாது என்பது பற்றியும் அவர்கள் தீவிரகவனம் செலுத்தினர்.

ஒவ்வொரு ராஜ்யங்களுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கை (அகில பாரத சர்விஸ) ஒதுக்குவதுபற்றி முதல்மந்திரிகளிடையே கருத்துவேற்றுமை ஏற்பட்டது.

ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்துவதுபற்றியும் அவர்கள் பரிசீலனை செய்தனர்.

#### வன்முறை கூடாது

வன்முறைகளுக்கான காரணங்களை ஆராயவேண்டும் என்றும், அதேசமயம் வன்முறையினால் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் முறைக்கு இடமளிக்கக்கூடாது என்றும் முதன்மந்திரிகள் கருதினர்.

திரு சாஸ்திரி நேற்றைய கூட்டத்தில் பேசியபோது முதன்மந்திரிகள், தங்கள் செல்வாக்குப் பாதிக்கப்படுவது பற்றி அச்சமின்றி, ஒளிவு மறைவின்றி தங்கள் கருத்தை மகாநாட்டில் தெரிவிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்,

நேருவின் உறுதிமொழி முழுமையாக அமுல்நடத்தப்படும் என்றும், எந்தராஜ்யத்தின் மீதும் ஹிந்தி சுமத்தப்படமாட்டாது என்றும் திரு. சாஸ்திரி அறிவித்தார்.

#### துணைக்கமிட்டி

மொழிப்பிரச்னைபற்றி பரந்த அடிப்படை ஒன்றை வரைய நியமிக்கப்பட்ட ஐவர் துணைக்கமிட்டி சில யோசனைகளை வரைந்திருக்கிறது.

#### நந்தா

உள்நாட்டு மந்திரி திரு. நந்தா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தேச ஒற்றுமை குலையக்கூடாது என்றும் இந்த அடிப்படையிலேயே மொழிப் பிரச்னையை ஆராயவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

ஆங்கிலத்துக்குப் பதில் ஹிந்திக்கு மாறுவதில் அவசரம் கூடாதுஎன்றும், ஹிந்திபேசாதோர் விரும்பும்வரை ஆங்கிலம் இணைமொழியாக இருக்கும். நீடித்த இருமொழிக் கொள்கை இருந்துவரும் என்றும் அவர்கூறினார்.

---

## ஹாஸ்ய மன்னன் லாரல் மரணம்

லண்டன், பெப். 24

பிரபல ஹாஸ்ய ஜோடிகளில் ஒருவரான லாரல் தன் 75-வது வயதில் காலமானார். அவருடன் சேர்ந்து நடித்த ஹார்டி 7 ஆண்டுகளுக்கு முன் காலமானார், லாரல்—ஹார்டி ஹாஸ்யஜோடி நூற்றுக்கணக்கான ஆங்கிலப் படங்களில் உலக ரசிகர்களை பல்லாண்டுகள் நகைப்பில் ஆழ்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## ஜெனரல் கான் தூதராகிறார்

ஸைகோன், பெப், 24

தென் வியட்நாம் இரும்பு மனிதரான ஜெனரல் கான் உலகம் சுற்றும் தென் வியட்னாம் தூதராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஐ. நா. வில் அவர் தென் வியட்நாம் பிரதிநிதியாக இப்போது நியூயோர்க் செல்கிறார். புதிய பதவியை அவர் ஏற்றுக்கொண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

---

## 9000 தடவை சுட்டனர்

புதுடில்லி, பெப், 24

பாகிஸ்தான் துருப்புகள் பூஞ்ச் பகுதியில் 9000 தடவைகள் யந்திரத் துப்பாக்கிகளினால் சுட்டதாகவும் திருப்பிச் சுட்டதில் ஒரு பாகிஸ்தானியர் பலியாகி, மூவர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது. 18 முறை எல்லை மீறல் பற்றி ஐ. நா. பார்வையாளர்களிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

---

## பிரதமருடன் தூதர் பேச்சு

மாஸ்கோ, பெப். 24

மாஸ்கோவிலுள்ள இந்தியத் தூதர் திரு. கால், ரஷ்யப் பிரதமருடன் ஒரு மணிநேரம் நடத்திய பேச்சுக்களில் வியட்நாம், இந்திய—ரஷ்ய உறவு ஆகியன இடம்பெற்றன.

---

## ஐ. நா. வுக்கு பிரிட்டிஷ் படைகள்?

லண்டன், பெப். 24

ஐ. நா. சமாதானப்படை ஒன்று ஆரம்பிக்கப்பட்டால் பிரிட்டன் 6 படைப் பிரிவுகளையும், [illegible] மந்திரி அறிவித்திருக்கிறார்.

---

## உடன் பணம் செலுத்தியே வானொலி வாங்கலாம்

### வானொலி விநியோகத்தால் 450,000 ரூபா நஷ்டம்

கொழும்பு, செவ்வாய்

கிராமமுன்னேற்ற, சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படவிருக்கும் வானொலிகள் மாதாந்த தவணையில் வழங்கப்படமாட்டாதெனவும், உடனடியாக பணம் செலுத்தியே இச்சங்கங்கள் வானொலிகளை வாங்கவேண்டும் என கூ. மொ. வி. விநியோக மனேஜர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பூராவும் உள்ள சனசமூக, கிராமமுன்னேற்றச் சங்கங்களுக்கு வழங்கவென 8410 வானொலிகள் ஒதுக்கப்பட்டுள்ளனவாம். வானொலி பெற தகுதியுடைய நிலையங்கள் அரசாங்க அதிபர்களிடம் தகுதிப்பத்திரம் வழங்குமாறு அரசாங்க அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

வானொலிகளை வாங்குவதற்கு கூ. மொ. வி ஸ்தாபனத்துக்கு 1,300,000 ரூபா செலவான தென்றும் தலா 250 ரூபாவாக விற்பதால் 850,000 ரூபாவே வசூலாகும் எனவும் இதனால் அரசாங்கத்துக்கு பெரு நஷ்டம் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகிக்கவென 180 வானொலிப் பெட்டிகள் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திற்கு வந்துள்ளதாகவும், யாழ் மாவட்டத்தில் உள்ள சமூக, கிராம முன்னேற்றச் சங்கங்களிடமிருந்து 200 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

அரசாங்க அதிபரின் உறுதிப பத்திரத்தையும் 250 ரூபா 68 சதத்தையும் கொடுத்து வானொலிகளை கூ. மொ. வி. நிலையத்தில் பெறமுடியும். 58 சதம் 'பாட்டரி'க்குரிய பணமாகும்.

---

## "தமிழரின் பிரச்னையை தமிழரே தீர்க்கவேண்டும்

### பிறஉதவியை எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை'

மாவிட்டபுரம், புதன்

"இலங்கை வாழ் தமிழர்களை இன்று பல பிரச்னைகளும் நெருக்கடிகளும் எதிர்நோக்கியிருக்கின்றன. அரசாங்கத்துடன் சேர்ந்து மந்திரிப்பதவி எதையும் தமிழர்கள் தொடர்ந்து வகித்திருந்தால், தமிழர்களின் பல பிரச்னைகள் இதுவரை தீர்க்கப்பட்டிருக்கும்" என்று நேற்றிரவு தெல்லிப்பழை அம்பனை சந்திக்கருகாமையில் காங்கேசன்துறை தொகுதி அபேட்சகர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் ஒழுக்சறிஞர் திரு. எஸ். இளையதம்பி பேசுகையில் கூறினார்.

இக்கூட்டம் திரு. கே. ஸ்ரீசுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

திரு. இளையதம்பி தொடர்ந்து பேசுகையில்; தமிழரசு கோருவதுபோல் இலங்கைத் தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சி ஒருபொழுதும் கிடைக்கமாட்டாதென்றும் சிங்கள கட்சிகள் எதுவும் சமஷ்டி ஆட்சி முறைக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்றும் கூறினார்.

"இந்தியாவில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியமான கோரிக்கை இப்பொழுதுகைவிடப்பட்டுள்ளது. நேரு அரசாங்கம் இலங்கையிலுள்ள பத்துலட்சம் இந்திய இனத்தவர்களை ஏற்க மறுத்திருந்தது. ஆனால், சாஸ்திரி அரசாங்கம் ஒரு வகையில் ஐந்துலட்சம் இந்தியத் தமிழர்களை ஏற்றுவிட்டது. இப்படியான நிலையில், தமிழரசுக் கட்சி கருதுவதுபோல இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா எவ்விதம் உதவியளிக்கமுடியும்.

சண்டையை ஏற்படுத்துவதன் மூலமோ, சத்தியாக்கிரகம் செய்தோ அல்லது இந்தியாவின் எந்தவித உதவியாலுமோ தமிழர்களின் உரிமைகளை இங்கு பெறமுடியாது. பழையகால சரித்திரங்கள் கூறுவதுபோல், எந்த அரசாங்கத்துடனும் சேர்ந்து அவர்களுடன் ஒத்துழைத்து எமது உரிமைகளைப் பெறுவதைத் தவிர வேறுவழியில்லை.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில், தமிழர்களை எதிர்நோக்கியுள்ள இந்த நெருக்கடியான நேரத்தில் தமிழர்கள் மிகவும் புத்திசாலித்தனமாகவும், கவனமாகவும தங்களது வாக்குகளை அளிக்கவேண்டும் என்றும் எதிர்வரும் தேர்தல் முடிவுகளின் மூலம் தமிழர்கள் தங்களது முன்னேற்ற வாழ்வை வளம்படுத்தக் கூடியதாகவிருக்கவேண்டுமென்றும் கூறினார்.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "தமிழரசு கட்சி வந்ததற்குப் பின்னர், தமிழினம் இரண்டாகப் பிரிந்துவிட்டது. கடந்த 56-ம் ஆண்டு தொடக்கம் 64-ம் ஆண்டு வரை பார்லிமெண்டுக்கு நீங்கள் இவர்களை ஏகோபித்து அனுப்பினீர்கள். ஆனால் கண்ட பலன் என்ன? இவர்கள், தமிழர்களின் இழந்த உரிமைகளில் நூறில் ஒரு சதவிகிதத்தையாவது மீட்டார்களா? இவர்கள் தமிழரசு கோரவில்லை, சமஷ்டிதான் கோருகின்றனர். தமிழரசுக்காக இவர்கள் போராடவில்லை. சமஷ்டிதான் இவர்களது கோரிக்கையென்றால் அதற்காவது இவர்களிடம் ஸ்திரமான வேலைத்திட்டமோ அல்லது கொள்கையோ இல்லை.

வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் உள்ள தமிழ்பேசும்மக்களிடம் சென்று தமிழர்களின் உரிமைகளுக்காக தாங்கள்தான் போராடுவதாகவும், இழந்த உரிமைகளைத் தங்களால்தான் மீட்க

(4-ம் பக்கம் பார்க்க)

---

## பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டன

கல்கத்தா, பெப். 24

இன்று திறக்கப்படவிருந்த மேற்கு வங்காளத்திலுள்ள சகல கல்லூரி நிலையங்களும் வருகிற 27-ம் திகதிவரை மீண்டும் மூடப்பட்டிருக்கின்றன.

---

## ஏடன் அரசாங்கம் ராஜினாமா

ஏடன், பெப். 24

ஏடன் அரசாங்கம் ராஜினாமா செய்திருக்கிறது. நாட்டின் அரசியலமைப்பு பற்றி மந்திரிகளிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதமே இதற்குக் காரணம்.

---

## பாகிஸ்தானில் தபால் ஊழியர் வேலைநிறுத்தம்

### ராணுவத்தினர் முக்கிய இடங்களில் கடமையாற்றினர்

டாக்கா, பெப். 24

மேற்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட தபால் ஊழியர் வேலைநிறுத்தம் கிழக்கு பாகிஸ்தானுக்கும் பரவியிருக்கிறது. கிழக்கு பாகிஸ்தானில் அதிகச் சம்பளம் கோரி 60000 க்கு மேற்பட்ட தபால், தந்தி, டெலிபோன் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்,

வேலைநிறுத்தம் சட்டவிரோதம் எனப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் தபால் தந்தி வேலைகளை ராணுவத்தினர் மேற்கொண்டனர்.

மேற்கே பாகிஸ்தானில் நேற்றுக்காலை பல்லாயிரக்கணக்கான தபால், தந்தி, டெலிபோன் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

வியாழக்கிழமை காலை 10 மணிக்குள் அனைவரும் வேலைக்குத் திரும்பாவிட்டால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரத்தில் வாளித் தொழிற்சாலை

மாவிட்டபுரத்தில் 'எல்பி ஹெம் ஹவுஸ்' நிறுவனத்தார் யாழ்ப்பாண மாவட்டத்திலே இல்லாத ஒரு தொழில் நிலையத்தை ஆரம்பித்துள்ளனர். மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான வாளிகளை இந்த நிறுவனத்தார் தயாரிக்கின்றனர். பல அளவுகளிலும் அழகான அமைப்பு, பூச்சுக்களுடன் அமைந்த வாளிகளைத் தயாரிக்கும் இந்த நிறுவனத்தைப் போய்ப் பார்க்கும் வாய்ப்புக்கிடைத்தது.

மாவிட்டபுரம் — காங்கேசன் துறை வீதியில் மாவை முருகன் ஆலயத்திற்கு அணித்தாக இத்தொழிற்சாலை அமைந்துள்ளது. வாளித்தொழிற்சாலை ஸ்தாபகரும் உரிமையாளருமான திரு. ஏ. சின்னத்தம்பி வாளி உற்பத்தியாகும் முறையை ஒவ்வொரு கட்டமாகக் காண்பித்தார்.

பிறநாடுகளிலிருந்து வருவிக்கப்பட்ட இரும்புத்தகடுகள், தயாராகும் வாளிகளின் அளவிற்கேற்ப இயந்திர உதவியுடன் வெட்டப்பட்டபின் தொழிலாளர்களான இளைஞர்கள் வாளியை ஒவ்வோர் அம்சமாகத் தயாரிக்கின்றனர். கம்பிகள் வளைப்பதிலிருந்து சகல வேலைகளும் அங்கேயே நடைபெறுகின்றன. வாளி தயாரானதும் அதற்கு துத்தநாகப் பூச்சு அழகான முறையில் நடைபெறுகின்றது. இலங்கையிலே மிகவும் தரமானதாகவும் சிறந்ததாகவுமுள்ள 'கல்வெக்ஸ்' உலை மின்சாரத்தில் இயங்குகிறது. கண்ணைப் பறிக்கும் அழகுடன் வாளிகளுக்கு இந்த உலையில் வைத்தே துத்தநாகம் பூசப்படுகிறது. தற்போது இலங்கை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் வாளிகளைவிட இவை தனித்தன்மையாகக் காட்சி தருகின்றன.

'கல்கத்தா வாளிகள்' தான் வாளி மார்க்கெட்டில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. ஆனால் அவற்றின் தரத்திற்கு ஒப்பாக, இங்கு தயாராகும் வாளிகளையும் பாவனையாளர்கள் விரைவில் ஒப்புக்கொள்ளும் நிலை ஏற்படும்.

இந்த நிறுவனத்தார் தமது வாளிகளுக்குப் பொறித்துள்ள சின்னம் ஊரின் பெருமையைப் பறைசாற்றுகிறது. குதிரை முகம் மாறிய கதையைக் கொண்ட மாவிட்டபுரத்தின் நினைவை இந்த வாளிகளின் 'குதிரை மார்க்' நினைவுபடுத்துகிறது.

இங்கு தயாரான குதிரை மார்க் வாளிகள் உயர்தரக உலோகத் தகட்டில் உறுதியான அமைப்பும் வார்ப்பும் துத்தநாகப் பூச்சும்கொண்டவை.

இத்தொழிற்சாலைக்கு வேண்டிய உபகரணங்கள் இந்தியா, பிரிட்டன் போன்ற வெளிநாடுகளிலிருந்து வருவிக்கப்படவிருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து உபகரணங்கள் வருவிக்க அரசாங்கம் அனுமதித்துள்ள செலாவணித் தொகை போதியதாக இல்லையென்று உரிமையாளர் குறைபட்டுக்கொண்டார். அரசாங்கம் இப்புதிய தொழில் நிறுவனங்களுக்கு மேலும் உதவியளித்தால் தொழில் நிலையம் முன்னேற்றமடைய வாய்ப்பு ஏற்படுவதோடு வெளிநாட்டுச் செலாவணியில் கணிசமானதோர் தொகையை மிச்சம் பிடிக்கமுடியும்.

மாவிட்டபுரம் வாளித்தொழிற்சாலையில் சுமார் 75 இளைஞர்கள் வேலைசெய்கின்றனர். இயந்திர வசதிகளும் போதியதே. இத்தொழிற்சாலைக்கு வேண்டிய ஆலோசனை தெரிவித்து வழிநடத்தும் பொருட்டு இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட தொழில் நிபுணர் சோமசுந்தர ஐயரும் இத்தொழிற்சாலை வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக உள்ளார். தினசரி 50 டசின் வாளிகள் தயாராகக்கூடிய இந்த நிறுவனத்திற்கு வேண்டிய இரும்புத்தகடுகள், அமிலம், துத்தநாகம் போன்ற உபகரணங்கள் லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி இந்தியா, போன்ற நாடுகளிலிருந்து வருவிக்கப்படுகின்றன.

மாவிட்டபுரத்தில் இப்புதிய தொழிற்சாலையை அமைத்து இப்பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும், தரமான உற்பத்தியும் அளித்த 'எல்பி ஹெம் ஹவுஸ்' நிறுவனத்தாரும் உரிமையாளர் ஏ. சின்னத்தம்பியும் இலங்கை மக்களின் நன்றிக்கு உரியவர்கள்.

—ராஜன்

## தமிழரின் பிரச்னை...

(3-ம பக்கத் தொடர்ச்சி)

முடியுமென்றும் இக்கட்சியினர் கூறித்திரிகின்றனர். ஆனால் இவர்கள் இதுவரை சாதித்த சாதனைகள் என்ன என்பதை மக்கள் உணர்ந்துகொண்டனர் என்பதை நினைவில் வைத்திருக்க தமிழரசுக் கட்சியினர் மறந்துவிடுகின்றனர்.

கடந்தகாலத்தில் செய்த தவறுகள் எதிர்காலத்திலும் நேரிடக்கூடாது. இந்தவகையில் தமிழ்மக்கள் மிகவும் நிதானத்துடன தங்களது வாக்குகளை அளிக்கவேண்டும் என்றும் எதிர்கால தமிழர்களின் வாழ்வை மங்கவிடாது செய்ய வேண்டும் என்பதையும் உங்களுக்கு நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்."

காங்கேசன்துறை அபேட்சகர் திரு ச. ஸ்ரீ பாஸ்கரன் பேசுகையில், சத்தியாக்கிரக நிதியை வெளியிட தமிழரசுக் கட்சியினர் மறுக்கின்றனர். ஆனால் தாம் அறிந்த அளவில் சுமார் எட்டரை லட்சம் ரூபா நிதி, சத்தியாக்கிரகமூலம் திரட்டப்பட்டிருக்கிறது என்பதைக் கூற விரும்புவதாகத் தெரிவித்தார்.

சத்தியாக்கிரகம் பிசுபிசுத்த நேரத்தில் தபால் இயக்கத்தை ஆரம்பிக்கும்படி ஆலோசனை கூறியவன் நான்தான் என்பதை இங்கு தெரிவிக்கவிரும்புகின்றேன். இதெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால், தமிழினம் கஷ்டப்படும்பொழுது அதற்கு மாற்றுவழி கண்டுபிடிப்பதில் நான் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறேன் என்பதைக் கூறவே.

நான் இத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்டால் மூன்று வருடங்களில் மொழிப் பிரச்னையையும், படித்த வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தீர்த்துவைப்பேன். இதில் தவறினால் அடுத்த தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன் என்பதை பகிரங்கமாகக் கூறுகிறேன்" என்று திரு ஸ்ரீ பாஸ்கரன் கூறினார்.

திருவாளர்கள் எம். சிவநேசன், எம். கே. சுப்பிரமணியம். ஆர். என். சிவப்பிரகாசம், ஏ. சிவசுந்தரம், வி. சங்கரப்பிள்ளை உட்பட பலர் பேசினர்.

## ஆபாசபடங்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி

பம்பலப்பிட்டி, புதன்

உள்ளூர் நட்சத்திரங்கள் முன்னோடிகள், அழகுராணிகள் ஆகியோர் ஆபாசமான முறையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அமெரிக்காவுக்கு இங்கிருந்து சிலர் கள்ளத்தனமாக அனுப்புவதாக அறியப்படுகிறது.

இவ்வித புகைப்படங்களுக்கு போஸ்' கொடுத்தவர்களை பொலிஸார் விசாரணைசெய்து வருகின்றனர்.

இவ்வித சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறாதவாறு கண்காணித்துக்கொள்ளுமாறு இலங்கை பொலிஸார், அமெரிக்க பொலிஸார் கேட்டுள்ளனர்.

## கமத்தொழிலரங்கு

### உருளைக் கிழங்குச் செய்கை

அடுத்த மாதம் 15-ம் திகதியளவில் யாழ் மாவட்டத்தில் 16 ஏக்கர் உருளைக் கிழங்கு அறுவடை செய்யப்படவிருக்கின்றது. இம்மாவட்டத்திலே காலபோகத்தில் மட்டுமே உருளைக்கிழங்கு உண்டுபண்ணலாம் இக்கலபோகத்திலே கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த எஸ. சிவலோகநாதன் ஒன்றரை ஏக்கரில் பயிரிட்ட உருளைக்கிழங்கிலிருந்து மார்ச்மாத முடிவில் ஏறத்தாழ 300 அந்தர் கிழங்குகிடைக்கவிருக்கிறது. குண்டசாலைக் கமத்தொழிற் பாடசாலையிற்பயிற்சி பெற்ற இந்த இளம் விவசாயி தமது அறிவைப் பயன்படுத்திக் கமச்செய்கையில் ஏனைய விவசாயிகளுக்கு முன்மாதிரி காட்டிவருகின்றார். கோண்டாவிலைச்சேர்ந்த எஸ். ஆசீர்வாதம் தாவடியைச் சேர்ந்த வி. வீரசிங்கம், கோப்பாயைச் சேர்ந்த எஸ் குணரத்தினம் கிளிநொச்சியைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய பிதா வில்வராஜசிங்கம் ஆகியோரினது உருளைக்கிழங்குத் தோட்டங்களும் இவ்வாண்டு சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

### பம்பாய் வெங்காயம்

யாழ் மாவட்டத்திலே ஆண்டுதோறும் இருபோகங்களிலும் பம்பாய் வெங்காயம் உண்டு பண்ணலாம். இக்காலபோகத்தில் 3 ஏக்கர்களில் பம்பாய் வெங்காயம் உண்டுபண்ணப்பட்டுள்ளது. இதில் இரு ஏக்கரும் வலிகாமம் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. கட்டுவனைச் சேர்ந்த வி. செல்லத்துரை சென்ற டிசம்பர் 15-ம் திகதி நாலங்குலக்கன்றுக நாட்டியிருந்த பம்பாய் வெங்காயத்தை மார்ச் மாதம் 15-ம் திகதி அறுவடைசெய்யவிருக்கின்றார் யாழ் மாவட்டத்தில் இவரது செய்கையே முதலிடம் பெற்றுள்ளது. அடுத்த சிறுபோகத்தில் யாழ் மாவட்டத்திலே 12 ஏக்கர்களில் பம்பாய் வெங்காயம் உண்டு பண்ணத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது நாரளை மாவட்டத்தைத்தவிர ஏனைய மாவட்டங்களுள் யாழ் மாவட்டமே மேற்படி இருபயிர்ச் செய்கைகளிலும் முதலிடம் வகிக்கின்றது.

## வாலிபர் தற்கொலை

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த சி கணபதிப்பிள்ளை (24 வயது) என்னும் இளைஞர் தம்பசெட்டி முத்துமாரி அம்மன் கோவில் மடத்தில் பொலிடோல் அருந்தி மரணமானர். ஒரு குழந்தைக்குத் தந்தையான இவர் இறக்கும் தறுவாயில் அருகில்நின்ற ஒரு பெண்ணிடம் 'மனித வாழ்க்கை இவ்வளவுதான் தொழிலில்லாமல் வாழ்வதைவிடச் சாவதே மேல்' என்று கூறினாராம்.

மரணவிசாரணையின் பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## அழியாத மை உபயோகிக்கப்படும்

பம்பலப்பிட்டி, புதன்

மார்ச் 22-ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் அழியாத மையை உபயோகிக்க தேர்தல் கமிஷனர் திரு. டயஸ் அபசிங்கா தீர்மானித்துள்ளார்.

வாக்களிப்பவர்களின் விரல் அடையாளம் எடுப்பதற்கு உபயோகிக்கப்படும் இந்த மையை மிக்க அவதானத்துடன் உபயோகப்படுத்த வேண்டுமென வாக்களிப்பு நிலையங்களில் கருமமாற்றவிருக்கும் அதிகாரிகளுக்கு தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

விரல் அடையாளம் பெற்ற பின்னரே வாக்காளருக்கு வாக்குச்சீட்டு வழங்கப்படவேண்டுமென்றும் அவர் அறிவித்தல் செய்துள்ளார்.

# கூ. மொ. வி.யில் பலர் தற்காலிக வேலை நீக்கம்?

## 871 நியமனங்கள் சம்பந்தமாக எழுந்துள்ள நிலை

பம்பலப்பிட்டி, புதன்

கூட்டுறவு மொத்த ஸ்தாபனப் பகுதியில் 871 ஆட்களைப் புதிதாக நியமனம் செய்வது சம்பந்தமாக சில உத்தியோகஸ்தர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட விருப்பதாக அறியப்படுகிறது.

சிலர் வேலையிலிருந்து ராஜினாமாச் செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன நிர்வாகப் பகுதியில் கடமையாற்றி வரும் பல உத்தியோகஸ்தர்களுக்கு மேற்படி நியமனங்களில் பங்குண்டு என விசாரணையின் போது தெரியவந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன பதில்தலைவர் திரு எஸ். சமரதுங்கா விரைவில் தமது ராஜினாமாவை சமர்ப்பிக்க விருப்பதாக மேற்படி ஸ்தாபனவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திரு. சமரதுங்கா ராஜினாமா செய்யும் பட்சத்தில் அலுவல் டைரக்டர் ஜனாப். ஏ. எச். எம். சகாப்தீன் இப்பதவிக்கு நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# "சிங்களம் படிக்குமாறு எங்களை வற்புறுத்தக் கூடாது"

## நிதி மந்திரிக்கு ஆசிரியர்கள் மகஜர்

கொழும்பு, புதன்

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் நிதிமந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் பாடசாலை அதிபர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் தடைபற்றி முறைப்பாடு செய்திருக்கிறது.

இந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"சகல நகரங்களிலும் உள்ள பழைய முறைப்படி நியமனம் பெற்ற சகல அதிபர்கள், உப அதிபர்கள், தலைமையாசிரியர்கள் ஆகியோருக்குச் சிங்கள மொழியறிவின்மை காரணமாக திறைசேரி 21-9-63-ல் அனுப்பிய சுற்று நிருபத்திற்கமைய, வித்தியாதிபதியின் 17-3-64 சுற்றுநிருபத்தின்மூலம் 14-11-64 தொடக்கிப்படியேற்றம் தடைப்படுத்தப்பட்டுள்ளது.

21-9-63-க்குப் பிறகு இருமுறை படியேற்றம் தடைபடுத்தப்பட்ட போது, ஆசிரிய சங்கத்தின் நியாயபூர்வமான முறைப்பாட்டிற்கமைய அவை விலக்கப்பட்டன. தற்போது மீண்டும் படியேற்றம் தடைப்படுத்தப்பட்டுள்ளமையைத் தங்கள் கவனத்திற்குக்கொண்டுவர வேண்டுமென்ற எங்கள் நிருவாக சபையின் தீர்மானத்தின் பேரில் இவ்விஷயத்தைத் தங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

பின்வரும் காரணங்களினால் இவ்விஷயத்தில் தாங்கள் தலையிட்டு, 14-11-64 தொடக்கம் தடைப்படுத்தப்பட்டுள்ள படியேற்றம் மீண்டும் எமக்குக் கிடைத்தற்கு ஏற்றன செய்து தருமாறு தங்களைப் பணிவாக வேண்டுகிறோம்.

1 தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் மாணவர், தமிழ் பெற்றோர், தமிழ் சூழலில் சேவை செய்யும் தமிழ்த தலைமையாசிரியர்களுக்குச் சிங்கள மொழி அவசியமில்லை.

2 இந்த நாட்டின் அரசாங்க மொழி ஆங்கிலமாக இருந்த போதும் தமிழ் தலைமையாசிரியர்கள் தமிழிலேயே கடமையாற்றினர்கள். ஆங்கிலமொழியறிவில்லை என்ற காரணத்தால் அவர்களுக்கு ஒருபோதும் படியேற்றம் தடைபடுத்தப்படவில்லை. சுதந்திரமடைந்த இலங்கையில் இன்றுள்ள ஒரு லட்சம் ஆசிரியர்களில் ஒரு சாராருக்கு மட்டும் நீங்கிழைப்பது முறையாகாது. இந்த நாட்டில் உள்ள சகல ஆசிரியர்களுக்கும் ஒரே வகையான நீதி இதனால வழங்கப்படவில்லை.

3 வெறுமையாக விண்ணப்பம் மாத்திரம் அனுப்பி வித்தியாபகுதியாரைத் திருப்திப்படுத்தும் நிலைமையை எமது ஆசிரியர்கள் விரும்பவில்லை. படித்தற்கு வேண்டிய விருப்பமில்லாத நிலையில் ஆசிரியர்களைச் சிங்களம் படிக்குமாறு வற்புறுத்துவதோ, அவர்கள் சிங்களப் பரீட்சைக்குத் தோன்றிச் சித்தியடைந்து கடமையாற்றுவர் என எதிர்பார்ப்பதோ நியாயமாகாது.

4 வித்தியாபகுதியாரின் ஒழுங்கின்படி பிரதேசக் கந்தோர்கள் தொழிற்படுகின்றன. தமிழ் மாணருள்ள பாடசாலைகளைத் தமிழறிந்த வித்தியாதரிசிகளே மேற்பார்வை செய்கின்றனர், தமிழ்ப் பாடசாலைகளின் நிருவாகம தமிழிலேயே நடைபெறுகிறது. தலைமைக் காரியாலயம் சகல தொடர்புகளும் பிரதேசக் கந்தோர் மூலமாகச் செய்யும் வாய்ப்பு உண்டு. எனவே பாடசாலைத் தலைவர்களுக்குச்சிங்களமொழியறிவு அவசியம் வேண்டுவதன்று.

1958 வரையும் தமிழ் மாணவர் கல்வி பயின்ற பல கல்லூரிகளில், புக்க குருமாரும், சிங்கள ஆசிரியர்களும் சிங்களம் கற்பித்து வந்தனர். மாணவரும் பெற்றோரும் சுயமாக இதனை விரும்பினர். சிங்களம் மாத்திரம் என்பது கொண்டுவரப்பட்டுச் சிங்களம் படிக்க வேண்டுமென அரசாங்கம் முனைந்த போது தான் தமிழ்ப் பாடசாலைகளிற் சிங்களம் படித்தல் முற்றாகக் கைவிடப்பட்டது, என்பதனைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம், எவ்வளவுக்கெவ்வளவு கட்டாயமாகத் திணிக்க முனையப்படுகிறதோ, அவ்வளவுக்கு விருப்பமின்மையையும் ஒற்றுமைக் குறைவையும் உண்டாக்கும். இது இந்நாட்டின் தேசிய உணர்ச்சிக்குக் கூடப் பாதகமாக அமையலாம்.

ஆகையால், தாங்கள் இது விடையமாக உடனே தலையிட்டுத் தமிழ்ப் பாடசாலைத் தலைவர்களுக்கு நியாயம் கிடைக்க வழி வகுக்குமாறும், இந்நாட்டின் தேசிய உணர்ச்சி வளர மேலும் ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## தேர்தல்தின இரவு பொலிஸ் கண்காணிப்பு

பம்பலப்பிட்டி, புதன்

வாக்களிப்பு நடைபெறும் தினத்தன்று இரவு ஆயுதம் தாங்கிய 5,700 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் வாக்குப் பெட்டிகளைக் காவல் புரிவார்கள்.

இப்பெட்டிகளுக்குப் பொறுப்பான அதிகமான அதிகாரிகள் வாக்குச் சாவடிகளில் அன்று இரவைக் கழிக்க வேண்டியிருக்கும். வாக்குச் சாவடிகளுக்குப் பக்கத்திலுள்ள தமது நண்பர்களின் வீடுகளில் இரவு தங்கவிரும்பும் அதிகாரிகள் வாக்குப் பெட்டிகளையும் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும். இவர்களுடன் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் செல்வர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "இடதுசாரிகள் ஏன் அரசாங்கம் அமைக்கவில்லை? நாட்டிற்கேற்ற கொள்கை இல்லாததே காரணம்"—ஜே. ஆர்.

களனி, புதன்

"டாக்டர்கள் என். எம் பெரேராவும், கொல்வினும் எனது நெருங்கிய நண்பர்கள் நல்ல எண்ணங்கள் உள்ளவர்கள் என்பதும் எனக்கு நன்ஞகத் தெரியும். ஆனல் துரதிருஷ்டவசமாக அவருடைய கொள்கைகள் எங்கள் நாட்டிற்கு உகந்ததாக அமையவில்லை. இதன் காரணத்தினலேயே நாட்டில் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக ஒரு அரசாங்கத்தைக் கூட அமைக்க முடியவில்லை. பொதுத் தேர்தல்களில் மக்கள் தங்கள் கடமைகளை செய்ய வேண்டும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான திரு. டட்லி சேனநாயக்காவை மக்கள் தெரிவு செய்ய வேண்டுமா அல்லது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கூட்டாட்சியை மீண்டும் பதவிக்கு விட வேண்டுமா என்பதே இன்று மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னை. சுருங்கக் கூறினல் மக்களுக்கு ஜனநாயக ஆட்சிவேண்டுமா அல்லது சர்வாதிகார ஆட்சி வேண்டுமா என்பதே முக்கிய கேள்வியாகும். ஆனல் இந்த நாட்டு மக்கள் தாங்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை ஏற்கெனவே தீர்மானித்து விட்டார்கள்" என்று ஐக்கிய தேசியக்கட்சியின் துணைத் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பெத்தியகொடையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Pedro Armendariz
Jacqueline Sassard
in
SONS OF THUNDER
(Technicolor)

ஸ்ரீ மனேகரா (யாழ்ப்பாணம்) போன்; 485
நாகேஸ்வர ராவ் ஸ்ரீ ரஞ்சனி
திரைப்பட நடித்த
அரசாளப் பிறந்தவன்
தினசரி 6-30, 9-30. சனி, ஞாயிறு 2-30, 6-30, 9-30.

## வருமானவரி இலாகா நிர்வாகம்

பம்பலப்பிட்டி, புதன்

வருமானவரி இலாகா நிர்வாகம் முற்ருக திருத்தி அமைக்கப்படவேண்டுமென்றும் பலவித வரி சம்பந்தமாக அலுவல்கள் நடைபெற வேண்டியிருப்பதால் இவ்விதம் செய்யப்பட வேண்டியிருப்பதாகவும் வருமானவரி இலாகா கமிஷனர் திரு. எஸ். சிற்றம்பலம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

முன்னர் 1962-ம் வருடத்தில் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா இவ்விதம் சீர்திருத்தி அமைக்க முற்பட்டார். ஆனல் அவர் தமது மந்திரிபதவியை ராஜினமாச் செய்ததால் இது சாத்தியமாகாது போய் விட்டது.

சென்ற திங்கட்கிழமை வருமானவரி இலாகா கமிஷனர் காரியாலயத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் 4 துணை கமிஷனர்களும் 10 உதவி கமிஷனர்களும் கலந்து கொண்டனர். திறைசேரி நிர்வாக அமைப்பு பிரிவு டைரக்டர் திரு. வேர்ணன்பீலாம் கலந்து கொண்டார்.

## வள்ளுவர் விழா

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி ஐக்கிய கலாசாலையின் கல்லூரிக்கிளையில் மாணவர்களால் திருவள்ளுவர் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (நாவலபிட்டி) மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்
தினசரி பி. ப 2-30, 6-30, 10-00. சனி, ஞாயிறு காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00
ஜெமினி கணேசன் – சாவித்திரி (நடித்த)
கற்பகம்

# "1956க்குப்பின்பே நாட்டில் தொழிற் சங்க வளர்ச்சி"

## ஆசிரியர் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைக் கைத்தொழில் ஆசிரியர்சங்க யாழ்ப்பாணக் கிளைக் கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில்சங்கத் தலைவர் திரு. பி. காங்கேசுதலைமையில் நடைபெற்றது. கோப்பாய்த்தொகுதிசமசமாஜக்கட்சி அபேட்சகராகிய திரு. எம். துரைராசா பேசியபோது கூறியதாவது:

சுதந்திரக்கட்சி 1956-ம் ஆண்டு உதயமாகிய நாள் தொட்டு இலங்கையில் தொழிற் சங்கங்கள் வெற்றி நடைபோட்டுவளரத்தொடங்கியது எட்டு ஒன்பது அங்கத்தவர்களைக்கொண்டு தொழிற்சங்கம் அமைத்து பதிவு செய்யக் கூடியதாகவும் இருந்தது. ஒவ்வொரு தொழிற்சங்கங்களும் தங்கள் உரிமை கோரிப் போராடும்போது அங்கத்தவர்கள் சகலருடைய ஒருமைப்பாடான நல்நோக்கத்திற்காக அன்றி, தனி நபருடைய சுயநலத்திற்காகப் பாடுபடக் கூடாது.

திருமதி ஆர். சபாபதி, கைத்தொழில் ஆசிரியர், ஆசிரியைகளுடைய கஷ்டங்களைப் பற்றியும் குறைந்த சம்பளம், அதிக கால சேவை ஆகியன பற்றியும் குறிப்பிட்டார். சங்கச் செயலாளர் திரு. எஸ். சோமசுந்தரம், கைத்தொழில் ஆசிரியர்களுக்கு 10 வருட சேவையின் பின்பு சேவைப்பத்திரம் வழங்கப்படவில்லை என்று கூறினர். சங்கத்தலைவர் திரு காங்கேசு, இவ்வளவு காலமும் சேவையில் இருப்பவர்களை வயதுக் கட்டுப்பாடோ தராதரப்பத்திர நிபந்தனையோ இன்றி விசேஷ பயிற்சிக்கு அனுமதிக்கவேண்டும் என்று வற்புறுத்தினர்.

# விதை நெல்லை தேடிக்கொள்ள உடன் முயற்சியுங்கள்

## விவசாய செயற்குழு தலைவர் விடுத்துள்ள அறிக்கை

உடுப்பிட்டி, புதன்

"சிறுபோக காலபோக நெற்பயிர் தவறிவிட்டமையால் அடுத்த காலபோகத்திற்குத் தேவையான விதை நெல்லைத் தேடிக்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமென்பது யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வேளாண்மையாளர் எல்லோரினதும் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது".

மாவட்ட விவசாய செயற்குழுத் தலைவர் திரு என். டி. ஜயவீரா யாழ்ப்பாணப் பகுதி விவசாயிகளுக்கு விடுத்த விசேஷ சற்றறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

சாதாரணமாக யாழ்ப்பாணத்திற்கேற்ற நெல்லினங்கள் வேறு மாவட்டங்களில் உண்டு பண்ணப்படுவதில்லை, மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் இக்கால போக அறுவடையிலிருந்து போதிய விதை நெல் அரசாங்கத்தினுல் சேர்த்துக்கொள்ளப்படுதற்கு மில்லை. எனவே சிறுபோக காலபோக அறுவடைகளிலிருந்து இயன்றளவு விதைநெல் இப்பொழுதே சேமித்துக்கொள்ள வேண்டும். அயல் வேளாண்மையாளர்களிடமும் அதிர்ஷ்டம் நிறைந்த வேளாண்மையாளர்களிடமுமிருந்தும் இக்கால போகத்திலேயே விதைநெல் கொள்வனவு செய்யப்படவேண்டும்

## தொழிற் சங்கங்கள் ஒத்துழைப்பு

### கூட்டரசாங்கத்தை நிலை நிறுத்த

பம்பலப்பிட்டி, புதன்

கூட்டரசாங்கத்துக்கு சார்பான தொழிற் சங்கங்கள் கூட்டரசாங்கத்தை மீண்டும் பதவியிலமர்த்துவதற்கான வழிவகைகளை ஆலோசனை செய்வதற்காக சமீபத்தில் கொழும்பில் கூடியபோது பிற்போக்குவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுதவாறு தடுப்பதற்கு தம்மாலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. தொழிலாளர் வர்க்கத்தினர் சோஷலிச சக்திகளை அனுப்புவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

## டிக்கட் இன்றி செல்ல முயன்ருர்

சுன்னுகம், செவ்வாய்

சுன்னுகம் புகையிரத நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கும் புகையிரதநிலயத்திற்குள் அனுமதிச்சீட்டு இல்லாமல் நுழைய எத்தனித்த ஒரு நபருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. நிலைமை மோசமாகுமுன் புகையிரதநிலய அதிபர் சுன்னுகம் பொலிசாரை அழைத்தனர். சிறில் பொலிசார் தலையிட்டு நிலைமையை சமாளித்தனர்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 25-2-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 திரைப்படஇசை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 குழந்தைகள் சந்திப்பு, 5-45 பேச்சு—"கைத்தொழில் பொருட் காட்சி".

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இசைவகுப்பு, 7-00 மதிப்புரை, 7-15 பாட்டு — விஜயலக்ஷ்மி சண்முகம்பிள்ளை, 7-45 நாடகம் — "லண்டன் கந்தையா" 8-00 [illegible] 9-15 வயலின், 9-30 [illegible] பதிவுகள்;

## பயிற்சிக்கு சென்ருர்

உடுவில், புதன்

சண்டிருப்பாய், இந்துக்கல்லூரியின் அதிபர் திரு. ஆர். வை பிச்சினதும் திருமதி பிச்சினதும் மகள் செல்வி ரெனி பிச் சென்ற வெள்ளிக்கிழமை லண்டன் பயணமானர். லண்டனிலுள்ள காக்கினி ஆஸ்பத்திரியில் நரம்பு சத்திர வைத்தியத்தில் தனிப் பயிற்சி பெறுவார். இவர் சண்டிக்குளி பெண்கள் கல்லூரியினதும் உடுவில் பெண்பாடசாலையினதும் பழையமாணவி.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

வரி விளம்பரம்

**டைப்ரைட்டர்**

'டைப்ரைட்டர்' பழுதுபார்த்துக்கொடுக்கப்படும். குறைந்தசெலவு, சிறந்த வேலை. ஜெயசேகரா, 830, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 1721

**தேவை**

நல்ல அனுபவம், நேர்மையும், கணக்குத் தெரிந்தவருமான மனேச்சர் விறகுகாலைக்குத் தேவை, மாத வேதனம் 150 ரூபா. தொழில்நிலயத்தில் தங்கியிருப்பதற்கு இடம் வசதி செய்துகொடுக்கப்படும். பிணை ஆதனம் 1000 ரொக்கம் 250 ரூபா. சேர விரும்புவோர் நேரடியாக, இ சண்முகநாதன் ஈழநாடு பத்திரிகைக் காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும். 1723

கைத்தொழில் நிலயத்தில் தொழில் செய்ய விரும்புவோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகமை, தொழிலுக்கேற்ப வேதனமுண்டு. பத்துச்சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். தங்கா கெமிக்கல் இன்டஸ்றீஸ், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. 1717

டிசைபின் வேலை தெரிந்த ஆண், பெண், கைத்தறி நெசவாளர் தேவை. 1-3-65 க்குள் நேரில் வரவும். காகலட்சுமி நெசவுசாலை, தாமோதரம் பிள்ளைவீதி, சாவகச்சேரி. 1718

நல்ல அனுபவமுள்ள டிறக்ரர் சாரதி தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். க. நாகரத்தினம் பிரப்பங்குளம் ஒழுங்கை வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1727

**விற்பனைக்கு**

சுந்தரோடை பிரதான வீதியில் ஸ்கந்த வரோதயக் கல்லூரிக்குக் கால்மைல் தூரத்துக்குள் வீடுகட்டக் கூடிய அளவு 20 பரப்பு முழுவதுவாகவோ பகுதி பகுதியாகவோ விற்பனைக்கு உண்டு. பாகுபாடற்ற முறையில் யாரும் பெற்றுக் கொள்ளலாம். உடன் விண்ணப்பிக்கவும். மா. நடராசா, 82/2 ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம். 1726

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலேக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50

வைத்தியர் பரிபூரணனந்தா கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## பாடசாலை வளர்ச்சிக்கு உதவி

பொகவந்தலாவ, புதன்

பொகவந்தலாவ ஹோலிரோசரி சிரேஷ்ட பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்கம் பாடசாலை வளர்ச்சிக்காக பல தொண்டுகளில் ஈடுபட்டு கடந்த வருடம் பெரிய மண்டபம் ஒன்றை கட்டி பாடசாலைக்கு உதவியது அதேபோல் இவ்வருடமும் ஒரு மண்டபத்தை அமைத்துக் கொடுத்துள்ளது.

## தபோவனத்தில் மகாசிவராத்திரி

கண்டி, புதன்

வருகிற 1-3-65 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு தென்னகும்பரை சச்சிதானந்த தபோவனத்தில் மகாசிவராத்திரி அனுஷ்டிக்கப்படும். இரவு முழுதும், பூஜைகளும், பிரார்த்தனைகளும் யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர்னர் ஜெனரலுக்கு குடியேற்ற வாசிகள் மகஜர்

## நிவாரண உதவி வழங்க முறைப்பாடு

இராமநாதபுரம், புதன்

இராமநாதபுரம் குடியேற்ற வாசிகள், சூறாவளியால் பாதிக்கப்பட்ட தங்களுக்கு இதுவரை எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என குறிப்பிட்ட மகஜர் ஒன்றை மகாதேசாதிபதிக்கும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பியுள்ளார்கள். மகஜரில் குறிப்பிட்டதாவது:

"சென்ற 22-12-64-ல் இப்பகுதியில் வீசிய சூறாவளியால் இங்கு வசிப்பவர்களாகிய நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டோம். எங்கள் வீடுகளின் கூரை முதலியன பிடுங்கி எறியப்பட்டும் சுவர்கள் பழுதடைந்தும் விட்டன. வீட்டைச் சேர்ந்த நிலத்திலுள்ள தென்னை, மா, வாழை, பலா முதலிய பயிர்கள் எல்லாம் அழிந்து விட்டன. இதனால் நாங்கள் உணவிற்கு வழியற்றவர்களாக மிகவும் கஷ்டப்படுகின்றோம். இச்சம்பவம் நடந்து இரண்டு மாதங்கள் முடிவடைந்தும் எங்களுக்கு அரசாங்கம் எதுவித நிவாரணமும் வழங்க முன்வரவில்லை.

எங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நஷ்டங்களினால் எவ்வித வருவாயும் இல்லாது சீவியத்திற்கு மிகவும் கஷ்டப்படுகின்றோம். இச்சமயத்தில் பழுதடைந்த வீடுகளைத் திருத்தவும் முடியாமல், மழை, வெய்யில், பனி முதலியவற்றினால் வருந்துவதோடும் பங்கீட்டரிசியை கூட வாங்குவதற்கு பணமில்லாது கஷ்டப்படும் அவலநிலைக்கு ஆளாகியுள்ளோம்.

ஆகவே எங்களுக்கு ஏற்பட்ட இந்த இன்னல்களைப் பார்வையிட்டு உடன் ஏற்ற நிவாரணம் வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்".

# வைத்திய அத்தாட்சிப் பத்திரம் பெற்று வாகனத்தில் செல்லலாம்

## அங்கவீனர்கள் வாக்களிப்பதற்கு செய்யப்பட்டிருக்கும் சலுகை

பம்பலப்பிட்டி, புதன்

அங்கவீனமான வாக்காளர்கள் வைத்திய அத்தாட்சி பத்திரம் பெற்று தமது வாக்குகளைச் செலுத்துவதற்காகத் தனிப்பட்ட மோட்டார் வாகனங்களை உபயோகிக்கலாம் எனத் தேர்தல் கமிஷனர் திரு. ஈ. எப். டயஸ் அபயசிங்கா அறிவித்துள்ளார்.

இவ்வித வாக்காளர்கள் மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் மார்ச் 15-ம் திகதியன்றோ அதற்கு முன்னரோ அதாவது தேர்தல் தினமான மார்ச் 22-ம் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இது பற்றி விண்ணப்பிக்கவேண்டும். வைத்திய அத்தாட்சிப் பத்திரங்கள் ஆஸ்பத்திரிகள், மருத்துவசாலைகள், ஆயுர்வேத, ஆங்கில வைத்திய நிபுணர்கள் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் தமது போக்குவரத்துச் சம்பந்தமாக விண்ணப்பிக்கையில் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களையும் இணைக்கவேண்டும்.

வைத்திய அத்தாட்சிப்பத்திரங்கள் இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு (அரசாங்க அதிபர்) நிரப்பி அனுப்பவேண்டிய விண்ணப்பபத்திரங்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரியின் காரியாலயம், காரியதிகாரி கந்தோர், கிராமசேவகர்களின் காரியாலயங்கள், தேர்தல் காரியாலயம் ஆகிய இடங்களிலிருந்து கபற்றுக்கொள்ளலாமெனறும் எனினும் இவ்வித விண்ணப்பபத்திரங்களில்தான் விபரங்கள் நிரப்பியனுப்ப வேண்டும் என்ற கட்டாயமில்லை எனவும் தேர்தல் கமிஷனர் தெரிவித்தார்.

# இலங்கை-இந்திய போக்குவரத்துக்கு கொழும்பு-தூத்துக்குடி பாதை

## தலைமன்னார்-தனுஷ்கோடி பாதை கைவிடப்படலாம்

பம்பலப்பிட்டி, புதன்

தலைமன்னார் - தனுஷ்கோடி கடல்பாதையை மூடிவிட்டு பதிலாக கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு செல்லக்கூடிய பாதையை திறப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது இதுபற்றி தென் இந்திய ரயில்வே சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சபை இதனை ஏற்றுக்கொண்டால் கடந்த 50 வருடகாலமாக உபயோகிக்கப்பட்டு வந்த தலைமன்னார் - தனுஷ்கோடி பாதை மூடப்படலாம்.

சமீபத்தில் வீசிய சூறாவளி காரணமாக தனுஷ்கோடி இறங்குதுறை பெரிதும் சேதப்பட்டிருப்பதன் காரணமாக தென் இந்திய ரயில்வேசபை இந்த இறங்கு துறையை நிரந்தரமாக மூடிவிடவும் இங்கிருந்து கப்பல் போக்குவரத்து சேவையை நிறுத்திவிடவும் பதிலாக கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு கப்பல் போக்குவரத்து சேவையை நடத்தவும் ஆலோசனை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வித போக்குவரத்து சேவை துரிதமாக நடைபெறக்கூடியதாக இருப்பதோடு லாபமாகவும் இருக்குமெனவும் கருதப்படுகிறது.

# சித்தாண்டியில் ஆச்சிரமம்

மட்டக்களப்பு, செவ்.

யோகர் சுவாமிகளின் பேராசியுடன் யாழ்நகரில் அமைக்கப்பட்ட சிவதொண்டன் நிலையம் போன்ற ஒரு நிலையத்தை மட்டக்களப்பில உள்ள சித்தாண்டி என்னும் இடத்தில் சிவதொண்டன சபையார் பல ஆயிரக் கணக்கான ரூபாய் செலவில் நிறுவியுள்ளனர். இந்நிலயத்தின் ஆரம்ப வைபவம் அடுத்தமாதம் நடைபெறவிருக்கின்றது. இந்நிலயத்தில் சுவாமி இரும்ஸ்பேசதம் பணியாற்றிவருகிறார்.

# மூவர் கூட்டம் தோல்வி

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறைத் தொகுதி அபேட்சகர்களான திருவாளர்கள் கே. மோதிலால் நேரு (கம்யூனிஸ்ட்) கே. துரைரத்தினம் (தமிழரசு) என். நடராசா (தமிழ்க்காங்கிரஸ்) ஆகிய மூவரையும் ஒரே மேடையில் கொள்கை விளக்கம் செய்விப்பதற்கான பொதுக்கூட்டமொன்று இம்மாதம் 27-ந்திகதி வேலைவேண்டுவோர் கழகத்தால் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்ததென்றும் இக்கொள்கை விளக்கப்பேச்சுகளுக்கு திரு. கே. துரைரத்தினமும், கே. மோதிலால் நேருவும் சம்மதித்தபோதிலும் காங்கிரஸ் அபேட்சகர் திரு. ந. நடராசா சழகத்தின் நிபந்தனைக்குட்பட்டு கொள்கை விளக்கம் செய்ய மறுத்ததனால் இக்கூட்டத்தை நடாத்த முடியவில்லை யென்றும் அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகத் தலைவர் திரு. கே. ரி இராசசிங்கம் தெரிவித்தார். ஒப்புக்கொண்ட அபேட்சகர்கள் கையெழுத்திட்ட பத்திரத்தையும் அவர் காண்பித்தார்.

# "வாழ்க்கையை செப்பனிடும் இதிகாசங்கள்"

யாழ்ப்பாணம், வியாழன்

இக்காலத்தில் பட்டப்படிப்புகள் மலிந்துள்ள போதிலும் வாழ்க்கையில் நெறிதவறி நடப்போர் தொகை மலிந்துள்ளது. நமது முன்னோரில் பலர் கல்வி அறிவில்லாதிருந்த போதிலும் இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களை பிரசங்கங்கள் மூலம் கேட்டு அக்காவியங்களில கூறப்பட்டிருப்பது போன்று நெறியுடனும், பண்புடனும் தம் வாழ்க்கையை நடத்தினர்" என்று கேற்று வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதரின் இராமாயண கதாப்பிரசங்கத் தொடரை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா குறிப்பிட்டார்.

தவமிருந்து நல்ல குழந்தைகளைப் பெற்று நாட்டுக்குப் பெண்கள் பணிபுரியவேண்டும் எனவும் விஷ்ணு, சிவனின் அம்சமாக இருப்பதால் சிவாலயத்தில் இராமாயண பிரசங்கம் செய்வது பொருத்தமே எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வைபவத்துக்கு நீதியாசர் ஸ்ரீஸ்கந்தராஜா தலைமைவகித்த ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் கதாப்பிரசங்கங்கள் மூலம் சமயத்தொண்டாற்றி வருவதைப் பாராட்டினர்.

கதாப்பிரசங்கத் தொடரில் "இராஜெனனம்" என்னும் பொருள்பற்றி இன்று கதாகாலட்சேபம் செய்யப்படும்.

# 2 லட்சம் பேர் திரும்பினர்

புதுடில்லி, பெப். 24

சட்டவிரோதமாக இந்திய எல்லைக்குள் வந்த சுமார் 2 லட்சம் பேர் பாகிஸ்தானுக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாக இந்திய அரசாங்கம் இன்று அறிவித்துள்ளது.

# ரயில் சேவைகள்

சென்னை, பெப். 24

இராமேஸ்வரத்துடனான ரயில்சேவைகள் அடுத்தமாதம் முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்று இன்று அறிவிக்கப்பட்டது.

புதுடில்லி, பெப். 25

இந்தியாவுக்கு விஜயம் செய்[illegible] பிரித்தானிய பார்லி[illegible] தூதுக்குழு, இன்று [illegible] பேச்சுக்கள் நடத்தியது.

# இந்து வாலிபரின் சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், வியாழன்

அடுத்த மாதம் முதல்திகதி திருக்கேதீச்சரத்தில் நடைபெறவிருக்கும் சிவராத்திரி விழாவுக்கு கொழும்பு இந்து வாலிபர் சங்க அங்கத்தினர் பலர் வேறுபல தொண்டர்களுடன் சென்று சிவராத்திரிக்குச் சில நாட்களுக்கு முன்னதாகவும் பின்னரும் சிரமதானப் பணியில் ஈடுபட விருப்பதாக கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ். கதிரவேலு தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 27-ந் திகதி இரவு கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தளை கண்டி, நாவலப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்தும்பல தொண்டர்கள் சிரமதானப் பணியில் ஈடுபடுவதற்காக திருக்கேதீச்சரத்துக்கு ரயில் மூலம் வந்தடைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

# 'சிங்களத்திணிப்பை நிறுத்தவேண்டும்'

மீசாலை, புதன்

'சிங்களத் திணிப்பை இந்நேரத்தில் தடுத்து நிறுத்தாவிடில் இன்னும் ஐந்து வருடகாலத்தில், யாழ்ப்பாணம் சிங்களப் பிரதேசமாகிவிடும். கடந்த எட்டு வருடகாலமாக சிறிது சிறிதாக சிங்களம் திணிக்கப்பட்டு வருகிறது. தமிழரசுக்கட்சியினரின் அர்த்தமற்ற எதிர்ப்புகளின் காரணமாக சிங்களத் திணிப்பு மிக வேகமாக பரவி வருகிறது"

சாவகச்சேரி பெருங்குளம் சந்தைக்கருகில், சாவகச்சேரி இளைஞர் முன்னேற்றக் கழகசார்பில் நடைபெற்ற கூட்டத்தில் சாவகச்சேரி தொகுதி தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். சிவானந்தன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர். திரு ஆர் என் பூலோகசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. சிவானந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்பேசும் மக்களுக்கு சிங்களத்தல் கடிதம் வந்து கொண்டிருக்கிறது. தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத்தில் தேர்ச்சி இல்லாததால் கட்டாய ஓய்வு வழங்கப்படுகிறது. தெனபகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படுகிறது. இப்படி ஒன்றின்பின் ஒன்றாக சிங்களத் திணிப்பு நடைபெறுகிறது. இவற்றை வெறும் அறிக்கைகளாலும் வாய்ப்பேச்சினாலும் நிறுத்திவிடமுடியாது. செயலால் இறங்கவேண்டும். தமிழ்க்காங்கிரசை இம்முறை அனுப்பி மூன்று வருட அவகாசம் கொடுங்கள். சிங்களத் திணிப்பை தடுத்து நிறுத்தி, இராணுவத்தை தமிழ்ப் பகுதிகளிலிருந்து வெளியேற்றி தமிழ் உரிமையைப் பெற்றுத் தருவோம்.

காங்கேசன்துறை தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. ஸ்ரீ பாஸ்கரன், திருவாளர்கள்: ஏ. கே. குணசிங்கராசா, க. கனகரத்தினம், எஸ். தம்பு, வே. இராசரத்தினம், ஆ திலீனாதன், செல்வி மங்கையர்க்கரசி மற்றும் பலர் பேசினார்கள்.

# 24,000 கால்நடைகள் மாண்டன!

சென்னை, பெப். 24

அண்மையில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக இராமேஸ்வரத்திலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் 20,000 ஆடுகளும், 4 000 மாடுகளும் மாண்டுபோய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கைது

கோலாலம்பூர், பெப். 25

ஏராளமான ஆயுதங்களுடன் மலேசியாவுக்குள் ஊடுருவல் செய்த ஒன்பது இந்தோனேஷியர்கள் இன்று கைதுசெய்யப்பட்டனர்.

# காணவில்லை

சுமார் 4 1/2 அடி உயரமும், 12 வயதுமுடைய பிலிப் என்ற சிறுவனை கடந்த இரண்டு வாரங்களாக காணவில்லை. இவர் கடைசியாக கறுப்புக்கோடிட்ட நீல சாரமும், நீல சேர்ட்டும் அணிந்திருந்தார். இந்தச் சிறுவன் டூரப்பிட்டியா தோட்டத்தைச் சேர்ந்தவர். இவரைக் கண்டவர்கள் யாழ்ப்பாணம் கே.கே. எஸ். ரோட் 457-ம் இலக்கத்தில் அவரது பேரன் பெரியசாமியிடம் ஒப்படைக்கவும், அல்லது கிட்டிய பொலிஸ் நிலயத்திற்கு அறிவிக்கவும்.

1728

வவுனியா கொலைவழக்கு

# எதிரிக்கு மரண தண்டனை

யாழ்ப்பாணம், வியா

வவுனியா அப்புவின் கொலை வழக்கில் நீதியரசர் பி ஸ்ரீஸ்கந்தராசா எதிரிக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். ஜூரி சபையினர் எதிரி குற்றவாளியெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் தமது தீர்ப்பை தெரிவித்தார்.

இவ்வழக்கில் வவுனியா பிரிவிலுள்ள கல்லாறு என்னுமிடத்தில் தாவீஸ் அப்பு என்ற புகையிரத தொழிலாளி அவரது மனைவி அல்வினை காட்டிற்குள் கூட்டிச்சென்று கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கடந்த நான்கு தினங்களாக நடைபெற்ற இவ்வழக்கு விசாரணையின் தீர்ப்பையறிவதற்கு நீதிமன்றத்திற்குள் அதிகமான மக்கள் திரண்டிருந்தனர்.

திருக்கேதீச்சரத்திற்கு

# விசேஷ பஸ், புகையிரத சேவை

யாழ்ப்பாணம், புதன்

அடுத்த மாதம் முதலாம் திகதி திருக்கேதீச்சரத்தில் நடைபெறவிருக்கும் மகாசிவராத்திரியை முன்னிட்டு இம்மாதம் 27-ந் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 2-ந் திகதி வரை விசேஷ பஸ் புகையிரத வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அநுராதபுரம் மற்றும் பல இடங்களிலிருந்து மன்னார் செல்லும் பஸ்கள்யாவும் திருக்கேதீச்சரம் வந்து செல்லும் புகையிரதசேவை வவுனியாவிலிருந்து திருக்கேதீச்சரம் புகையிரதநிலயம் வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலயங்களில் இருந்து நேரடி பஸ் சேவைகள் உண்டு

சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீச்சரத்திற்கு வரும் யாத்திரிகர்களின் நலனைக் கருதி மன்னார் இ. போ. சபையும் யாழ்ப்பாணம் இ. போ. சபையினரும் தமக்கு மேலதிக பஸ்களை அனுப்பும் வண்ணம் தமது மேலதிகாரிகளை கேட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

# மரண அறிவித்தல்

## மணியம்

தம்பிப்பிள்ளை பிறதேர்ஸில் முன்னர் கடமையாற்றியவரும் இராசமணியின் கணவரும், மகேந்திரன், புவனேந்திரன், காலம்சென்ற டாக்டர் ஜெகதீஸ்வரி, நாகேஸ்வரி, குமரேஸ்வரி, யுகேந்திரன் ஆகியோரின் தந்தையும் பாபாவதி, மங்கையர்க்கரசி, விவேகானந்தன், ஸ்ரீபாலேஸ்வரன் ஆகியோரின் மாமனும் திருமதி ஜே. பி. கந்தையாவின் சகோதரருமான எஸ். ஜி. எஸ். மணியம் காலமாகிவிட்டார், ஈமக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு அராலி வடக்கு மயானத்தில் நடைபெறும், நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்க.

1729

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு [illegible] மாதம் 25-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org